குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி. எண்.87/2020

அ.சா.2

2023–ம் ஆண்டு செப்டம்பர் 04–ம் தேதி திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சி 2–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ஆனந்தன் | ஜாதி | |
| தந்தை பெயர் | வெங்கடாசலம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: காலை 11.50 மணி,

Accused (Marimuthu) present. Advocate Mr. K.T.Selladurai present for accused. APP Mr. Suresh Present.

**முதல் விசாரணை.**

1. நான் வாழப்பாடி அருகே உள்ள கோலாத்து கோம்பை என்ற ஊரில் குடியிருந்து கொண்டு காபி பாரில் காசாளராக வேலை செய்கிறேன். சம்பவ காலத்தில் நான் ஓமலூர் பிருந்தவனம் தியேட்டர் அருகே இருந்த அக்ஷயா காபி பாரில் காசாளராக பணி புரிந்தேன். கடந்த 07.10.2019–ம் தேதி இரவு 7.30– 8.00 மணியளவில் நான் காபி பாரில் கடையை சுத்தம் செய்து கொண்டிருக்கும் போது ஓமலூர் டூ தாரமங்கலம் செல்லும் சாலையில் ஓமலூரில் இருந்து தாரமங்கலம் நோக்கி லாரி ஒன்று வந்தது.

2. லாரிக்கு முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி இழுத்து சென்றது. இருசக்கர வாகனத்தில் ஒருநபர் வந்தார். அவரது மார்பின் மீது லாரியின் டயர் ஏறி காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். விபத்து ஏற்படுத்திய லாரியின் பதிவு எண். TN 52 F 8487, விபத்தில் இறந்து போன நபர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண் தெரியாது.

3. லாரியை ஓட்டி வந்தவரை விபத்து நடந்த 4–5 வருடங்கள் ஆகிவிட்டதால் ஞாபகம் இல்லை. விபத்தில் இறந்து போன நபரின் செல்போனில் இருந்து அவரது உறவினர்களுக்கு அருகில் இருந்தவர்கள் போன் செய்து வரவழைத்தார்கள். காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தோம். போலீசார் என்னை இது சம்மந்தமாக

விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.

4. இவ்வழக்கில் நான் புகார் கொடுக்கவில்லை. ஓமலூர் பேருந்து நிலையத்தில் இருந்து சம்பவ இடம் சுமார் 100 அடி தூரத்தில் இருக்கும். சம்பவ இடம் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான்.நான் வேலை செய்யும் அக்ஷயா காபி பாரின் உரிமையாளர் பெயர் தமிழ்வாணன். நான் காலை 10.00 மணிக்கு கடைக்கு வந்து மறுநாள் காலை 10.00 மணி வரை கடையில் இருப்பேன். எனக்கு ஒருநாள் விட்டு ஒருநாள் தான் வேலை.

5. சம்பவம் நடந்த அன்று போலீசார் என்னை விசாரித்தனர். அதற்கு பின்னிட்டு என்னை போலீசார் விசாரிக்கவில்லை.சம்பவம் நடந்த இடத்தில் போக்குவரத்து இருந்தது. ஆனால் அது இருட்டான இடம். நான் வேலை செய்யும் கடை மெயின் ரோட்டில் உள்ளது. விபத்து நடந்தவுடன் மக்கள் கூடி விட்டனர். நானும் சென்று பார்த்தேன். கூட்டம் சேர்ந்த பின் நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன் என்றால் சத்தம் கேட்டதால் சம்பவ இடத்திற்கு போய் பார்த்தேன்.

6. விபத்து ஏற்பட்டவுடன் அக்கம் பக்கத்தினர் கூச்சலிட்டனர் நான் சென்று பார்த்தேன். விபத்தை ஒரு இருசக்கர வாகனம் தான் ஏற்படுத்தியது என்றாலும், அதற்கு பின்னிட்டு தான் எதிரியின் வாகனம் சம்பவ இடத்திற்கு வந்தது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. சூர்யா என்பவரது இறப்பிற்கு நஷ்ட ஈடு பெறவேண்டும் என்பதற்காக எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளார்கள் என்றாலும், அதற்கேற்ப நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

7. சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், விபத்திற்கும், எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரியின் வாகனத்திற்கு சேதாரம் எதுவும் ஏற்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**மறு விசாரணை**. இல்லை.

சாட்சி. ஆனந்தன்

ஓம்/– எஸ். ஷர்மிளா,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஓமலூர்.